**மார்ச் – 24**

# TNPSC துளிகள்

- சமீபத்தில் நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் வனப் பிரிவில் நடத்தப்பட்டப் பறவைகள் கணக்கெடுப்புகளின் போது 162 இனங்களைச் சேர்ந்த 3,100க்கும் மேற்பட்ட பறவைகள் பதிவு செய்யப்பட்டன.
- திருச்சியில் கலைஞர் மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் என்பது அதிநவீன வசதிகளுடன் நிறுவப்பட உள்ளது.
- வேலூரின் CMC நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் டாக்டர் V.I. மதன், "To the Seventh Generation: The Journey of Christian Medical College Vellore" என்ற ஒரு தலைப்பிலான தனது புத்தகத்தினை சென்னையில் வெளியிட்டார்.
- உலக வங்கியின் உதவியுடன் இயங்கும் தமிழ்நாடு அரசின் நீர்ப்பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் (TNIAMP) ஆனது, மத்திய நீர்ப்பாசனம் மற்றும் மின் வாரியத்தின் (CBIP) 'ஒருங்கிணைந்த நீர்வளத்தின் மேலாண்மையில் சிறந்து விளங்கச் செய்வதற்கான 2024 ஆம் ஆண்டு' தேசிய விருதை வென்றுள்ளது.
- மேம்பட்ட திறன் கொண்ட போர்க் கப்பலான ஹிம்கிரி மற்றும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பலான ஆண்ட்ரோத் ஆகியவை கட்டுமான நிறுவனத்தின் கடல் சார் இயக்க சோதனைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன.
- அசாமின் நம்ரூப் எனுமிடத்தில் உள்ள பிரம்மபுத்திரா பள்ளத்தாக்கு உர உற்பத்திக் கழக லிமிடெட் (BVFCL) என்ற நிறுவனத்தில் முன்னதாக மேம்பாட்டுப் பணிகள் மேற் கொள்ளப் பட்ட பகுதியில் புதிய அம்மோனியா-யூரியா உற்பத்தி வளாகத்தினை நிறுவுவதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தியப் பத்திரிகைத் துறைக்கு என மிகவும் சிறந்தப் பங்களிப்பை வழங்கிய 27 பத்திரிகையாளர்களுக்கு என்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்களால் இராம்நாத் கோயங்கா பத்திரிகை சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டன.
- தென்னிந்தியாவிற்கான டென்மார்க்கின் கௌரவத் தலைமை தூதரும், சன்மார் குழுமத்தின் தலைவருமான விஜய் சங்கருக்கு, டென்மார்க் மன்னரால் மதிப்புமிக்க நைட்ஸ் கிராஸ் ஆஃப் தி ஆர்டர் ஆஃப் டேன்பிராக் விருது வழங்கப்பட்டுள்ளது.
- சுற்றுச்சூழல் வளங்காப்பு மற்றும் நீண்ட கால நிலைத் தன்மைக்கான ஒரு முக்கியச் செயற்கருவியாக மறுசுழற்சியினை நன்கு அங்கீகரித்து ஊக்குவிப்பதற்காக வேண்டி ஆண்டுதோறும் மார்ச் 18 ஆம் தேதி உலகளாவிய மறுசுழற்சி தினம் கொண்டாடப் படுகிறது.
- மொழியியல் மற்றும் கலாச்சாரப் பன்முகத்தன்மை மற்றும் சர்வதேச உறவுகளில் பிரெஞ்சு மொழியின் முக்கியப் பங்கைக் கொண்டாடுவதற்காக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 20 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் பிரெஞ்சு மொழி தினம் அனுசரிக்கப் படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாடு அரசின் இறுதி துணை மதிப்பீடுகள் 2024-25

- 2024-25 ஆம் ஆண்டிற்கான சுமார் 19,287.44 கோடி ரூபாய்க்கான இறுதி துணை மதிப்பீடுகளை தமிழ்நாடு நிதியமைச்சர் சட்டமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.
- மொத்த மதிப்பீடுகளில் வருவாய்க் கணக்கில் உள்ள 12,639.36 கோடி ரூபாய், மூலதனக்

கணக்கில் 6,429.20 கோடி ரூபாய் மற்றும் கடன் கணக்கில் சுமார் 218.88 கோடி ரூபாய் ஆகியவை அடங்கும்.

- தமிழ்நாடு பொது விநியோகக் கழகத்திற்கான மூலதன உதவியாக 2,000 கோடி ரூபாய் கூடுதல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| கோரிக்கை எண் Demand Number | இக்கோரிக்கை எந்த பணிக்கு அல்லது எந்த நிருவாகத்திற்குத் தொடர்புடையது Services or Administration to which the Demand relates | 2024–2025 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்காகத் தேவைப்படும் தொகை மதிப்பீடு – மொத்தக் கோரிக்கை Estimate for the Amount required for further Expenditure for 2024-2025 -Gross Demand | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | *சாட்டியது Charged* | | | அனுமதித்தது Voted | | |
| | | வருவாய் Revenue | மூலதனம் Capital | கடன் Loan | வருவாய் Revenue | மூலதனம் Capital | கடன் Loan |
| 054 | வனம் (சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை) FORESTS (Environment, Climate Change and Forests Department) | *4,93* | ... | ... | 149,41,89 | 19 | ... |
| 055 | இயற்கை வளங்கள் துறை NATURAL RESOURCES DEPARTMENT | *6,30* | ... | ... | 189,07,97 | 1 | 25,00 |
| 056 | *கடன் செலவுகள் DEBT CHARGES* | *95,55* | ... | ... | ... | ... | ... |
| 057 | *பொதுக் கடன்–திருப்பிச் செலுத்துதல் PUBLIC DEBT-REPAYMENT* | ... | ... | *3* | ... | ... | ... |
| | **மொத்தம் Total** | *103,46,51* | *93,35,76* | *3* | 12,535,89,38 | 6,335,84,56 | 218,88,23 |

| | |
|---|---|
| *சாட்டிய* மொத்தத் தொகை Total of sums *Charged* | *196,82,30* |
| அனுமதித்த மொத்தத் தொகை Total of sums Voted | 19,090,62,17 |
| பெருமொத்தம் Grand Total | 19,287,44,47 |

# தேசியச் செய்திகள்


## பால் பொருள் உற்பத்தித் துறை மேம்பாட்டிற்கான திருத்தப்பட்ட தேசிய திட்டம்




- திருத்தப்பட்ட தேசிய பால் பொருட்கள் உற்பத்தித் துறை மேம்பாட்டுத் திட்டத்திற்கு (NPDD) மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது இந்தியாவின் பால் பொருட்கள் உற்பத்தித் துறையை நவீனமயமாக்குவதையும் அதன் நீண்டகால வளர்ச்சியை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டதாகும்.
- மத்திய அரசின் முன்னெடுப்பாக வகைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்திற்கு கூடுதலாக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

- இந்தத் திட்டம் ஆனது, சுமார் 18.74 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்குப் பயன அளித்துள்ளது மற்றும் சுமார் 30,000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது.
- இது பால் பொருட்கள் கொள்முதல் திறனை ஒரு நாளைக்குக் கூடுதலாக 100.95 லட்சம் லிட்டராக அதிகரித்துள்ளது.

## வெப்பத் தாக்க நடவடிக்கைக்கான 300 செயல் திட்டங்கள் (HAPs)





- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) ஆனது, நகர அளவில் மேலும் 300 வெப்பத் தாக்க நடவடிக்கைக்கான சில செயல் திட்டங்களை (HAPs) அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது.
- இந்தியாவில் நகர அளவில் இது போன்ற ஒரு வகையில் 200 திட்டங்கள் மேற்கொள்ளப் படுவதற்கு இறுதி செய்யப்பட்டுள்ளன.
- இதை 500 திட்டங்களாக விரிவுபடுத்துவதற்கு NDMA இலக்கு நிர்ணயித்துள்ளது.
- இந்த ஆண்டு ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, கர்நாடகா, தெலுங்கானா, மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா போன்ற சில மாநிலங்களில் வெப்பநிலை 40 டிகிரி செல்சியஸ்க்கு மேல் உயரவுள்ளது.

## உச்ச நீதிமன்றம் - இந்தியாவில் உணவுப் பாதுகாப்புச் சமத்துவமின்மை

- சில மாநிலங்களின் மக்கள் தொகையில் சுமார் 70% பேர் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் நிலையில், அதிக மேம்பாட்டு விகிதம் மற்றும் தனிநபர் வருமானம் என்ற சில கூற்றுக்கள் குறித்து உச்ச நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.
- அரசியலமைப்பின் 21வது சரத்தின் கீழ் ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் ஒரு அடிப்படை வாழ்க்கை உரிமையின் அடிப்படையில் ஒரு நாளைக்கு என்று குறைந்தது இரண்டு வேளை உணவைப் பெற ஒரு உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.
- தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உணவு தானியங்களை வழங்க மத்திய


அரசு கடமைப்பட்டுள்ளது.

- இந்தச் சட்டத்தின் கீழ், உணவு தானிய வழங்கீடு ஆனது 81.35% சதவீதமாக இருந்தது.
- அங்கன்வாடி திட்டத்தின் கீழ் சுமார் 11 கோடி மக்களுக்கு கூடுதல் உதவிகள் வழங்கப் படுகின்றன என்பதோடு இது மேலும் 22 கோடி மக்களை உள்ளடக்குகிறது.




## சர்வதேசச் செய்திகள்

### நைட்ரஜன் வாயு செலுத்தி மரணதண்டனை வழங்கல் – லூசியானா, அமெரிக்கா





- லூசியானா மாநில அரசானது முதல் முறையாக நைட்ரஜன் வாயுவைப் பயன்படுத்தி ஒருவருக்கு மரணத் தண்டனையினை நிறைவேற்றியுள்ளது.

- 15 ஆண்டுகளில் இது அந்த அரசின் முதல் மரணதண்டனை ஆகும்.
- இந்த முறையைப் பயன்படுத்தி அமெரிக்காவில் இரண்டாவது முறையாக இத்தகைய மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.
- அமெரிக்காவில் ஒருவருக்கு மரண தண்டனை விதிப்பதற்கு வேண்டி, நைட்ரஜன் வாயு செலுத்துதல் முறையானது நான்கு முறையில் மட்டுமே (அனைத்தும் அலபாமாவில்) பயன்படுத்தப்பட்டுள்ளது.
- லூசியானா அரசானது, கொடிய உயிர்க்கொல்லி மருந்துகளைப் பெறுவதில் சிக்கலை எதிர் கொண்டுள்ளது.
- லூசியானாவில் 50க்கும் மேற்பட்ட கைதிகள் மரண தண்டனையினை பெற உள்ளனர்.
- எதிர்கால மரண தண்டனைகளுக்காக என்று அந்த அரசானது, ஒரு சிறப்பு நைட்ரஜன் ஹைபோக்ஸியா வசதியை உருவாக்கியுள்ளது.
- நைட்ரஜன் ஹைபோக்ஸியா என்பது ஒரு கைதிக்கு ஆக்ஸிஜன் வழங்கீடு நிறுத்தப் படுவதால் அவரது மரணத்திற்கு வழி வகுக்கும் வகையில் ஒரு மரண தண்டனையை நிறைவேற்றும் முறையாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் நிகர அந்நிய நேரடி முதலீடு 2024-25

Foreign Direct Investment Flows





- இந்தியாவில் நிகர அந்நிய நேரடி முதலீடு (FDI) ஆனது, 2024-25 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் (ஏப்ரல் 2024-ஜனவரி 2025) 1.4 பில்லியன் டாலராகக் குறைந்துள்ளது என்ற நிலையில் இது ஓராண்டிற்கு முன்னதாக 11.5 பில்லியன் டாலராக இருந்தது.
- இருப்பினும், மொத்த அந்நிய நேரடி முதலீடு உயர்ந்தே உள்ளது என்பதோடு 2024 ஆம் ஆண்ட ஏப்ரல் முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வருடாந்திர வளர்ச்சியுடன் 67.7 பில்லியன் டாலராக இருந்தது.
- இது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாத காலக் கட்டத்தில் 60.2 பில்லியன் டாலராக இருந்தது.
- இந்தியாவில் நேரடி முதலீடு செய்தவர்களின் பணம் அனுப்புதல் / முதலீடு திரும்பப்

பெறுதல் ஆனது 2024-25 ஆம் ஆண்டின் 10 மாதக் காலத்தில் சுமார் 46.1 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

- வெளிநாடுகளில் உள்ள இந்திய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள், அதாவது, வெளிநாடுகளில் மேற்கொள்ளப்படும் FDI ஆனது, 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை 20.2 பில்லியன் டாலராக கடுமையாக உயர்ந்தது என்பதோடு இது ஓராண்டிற்கு முன்னதாக சுமார் 11.8 பில்லியன் டாலராக இருந்தது.
- இந்தக் காலக் கட்டத்தில் சிங்கப்பூர், மொரீஷியஸ், அமெரிக்கா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் நெதர்லாந்தில் இருந்து 75 சதவீதத்திற்கும் அதிகமான வருவாய் ஈட்டப்பட்டது.
- NRI வைப்புத் திட்டங்களில் வெளிநாட்டு இந்தியர்களிடமிருந்து வரும் பண வரவானது ஆண்டிற்கு 40.82 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையிலான காலக் கட்டத்தில் இது சுமார் 10.16 பில்லியன் டாலரில் இருந்து சுமார் 14.30 பில்லியன் டாலராக உயர்த்தப் பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## இராஜஸ்தானின் முகுந்திரா மலைக்குன்றுகளில் கறகால் பூனை




- இராஜஸ்தானின் முகுந்திரா மலைக் குன்றுகள் புலிகள் வளங்காப்பகத்தில் ஓர் அரிய கறகால் பூனை (காட்டுப் பூனை) தென்பட்டுள்ளது.
- இந்த அரியதொரு காட்டுப் பூனையின் எண்ணிக்கையானது இந்தியாவில் சுமார் 50க்கும் குறைவாகவே உள்ளது.
- கறகால் பூனை என்பது ஆப்பிரிக்கா, மத்தியக் கிழக்குப் பகுதி, மத்திய ஆசியா மற்றும்

இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட ஒரு நடுத்தர அளவிலான காட்டுப் பூனை இனம் ஆகும்.

- இந்தியாவில் அவை பொதுவாக குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன.
- கறகால் பூனை ஆனது, இந்தியாவில் மிக அருகி வரும் நிலையில் உள்ளதாக வகைப் படுத்தப் பட்டுள்ளது.

## அசாமில் நாய்த் தலையன் நீர்ப்பாம்பு

- நாய்த் தலையன் நீர்ப்பாம்பு (செர்பரஸ் ரின்காப்ஸ்) ஆனது முதன்முறையாக வட கிழக்கு இந்தியாவில் தென்பட்டுள்ளது.
- செர்பரஸ் ரின்காப்ஸ் என்பது உவர் நீரில் வாழும் மிதமான அளவிலான விஷமுள்ள, பகுதியளவு நீர்வாழ் இனமாகும்.
- பொதுவாக, இந்தப் பாம்பு இனமானது தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியா முழுவதும் உள்ள சதுப்புநில காடுகள், கடலோர சேறு நிறைந்த பகுதிகள் மற்றும் கழிமுகங்களில் காணப்படுகிறது.
- இந்தியாவில், இது குஜராத், மகாராஷ்டிரா, கேரளா, ஒடிசா, தமிழ்நாடு, தெலுங்கானா மற்றும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் போன்ற சில கடலோரப் பகுதிகளில் இருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.





# மாநிலச் செய்திகள்

## சிறப்புப் பிரிவு அந்தஸ்திற்கான கோரிக்கை - பீகார்

- பீகார் அரசு ஆனது 16வது நிதி ஆணையத்திடம் சிறப்புப் பிரிவு அந்தஸ்துக்கான புதிய கோரிக்கையை முன்வைத்துள்ளது.

- தற்போது, எந்த மாநிலமும் சிறப்பு வகை அந்தஸ்து கொண்டிருக்கவில்லை.
- இது திட்ட ஆணையத்தின் செயல்பாட்டுக் காலத்தில் நடைமுறையில் இருந்தது.
- அந்த வகைப்பாடு ஆனது திட்ட ஆணையம் மாற்றப் பட்டதுடன் முடிவுக்கு வந்தது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### ISA ஆணையத்தின் 30வது அமர்வு




- சர்வதேசக் கடற்படுகை ஆணையத்தின் (ISA) 30வது அமர்வு ஆனது ஜமைக்காவில் தொடங்கியுள்ளது.

- சுமார் 170 உறுப்பினர் நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் ஆழ்கடல் சுரங்கத்திற்கான விதிமுறைகளைப் பற்றி விவாதிப்பதற்காக கூடியுள்ளன.
- ISA என்பது 1994 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மிகவும் தன்னாட்சி மிக்க சர்வதேச அமைப்பாகும்.
- 1982 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் கடல் மீதான சட்டம் தொடர்பான ஒரு உடன் படிக்கை (UNCLOS) நடைமுறைக்கு வந்தபோது இது உருவாக்கப் பட்டது.
- சர்வதேசக் கடற்படுகையின் சுரங்கம் மற்றும் அதனுடன் தொடர்புடையப் பல்வேறு நடவடிக்கைகளை ISA நிர்வகிக்கிறது.
- ஆழ்கடல் சுரங்கமானது, 200 மீட்டருக்கும் அதிகமான ஆழத்தில் கடல் தளத்திலிருந்து கனிமங்களை பிரித்தெடுப்பதை உள்ளடக்கியது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20





- உலகளாவிய மகிழ்ச்சி தினம் என்ற கருத்தாக்கமானது பூடானில் தோன்றியது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) விட மொத்த தேசிய மகிழ்ச்சிக்கு (GNH) மிக முன்னுரிமை அளிப்பதற்காக பூடான் பிரபலமாக அறியப்படுகிறது.
- 2012 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகள் சபையானது இந்த நாளை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Caring and Sharing" என்பதாகும்.


## உலகச் சிட்டுக்குருவிகள் தினம் - மார்ச் 20

- பறவை இனங்களின் குறைந்து வரும் எண்ணிக்கை மற்றும் அவற்றைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இந்த நாள் ஆனது இந்தியாவின் நேச்சர் ஃபார் எவர் சொசைட்டி மற்றும் பிரான்சின் ஈகோ-சிஸ் ஆக்சன் அறக்கட்டளையின் கருத்தாக்கத்தில் உருவானது.

- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'A Tribute to Nature's Tiny Messengers' என்பதாகும்.




## உலக வாய் சுகாதார தினம் - மார்ச் 20




- வாய் சுகாதாரம், அதன் முக்கியத்துவம் மற்றும் வாய்வழி நோய்களுக்கு பங்காற்றும் காரணிகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.
- இத்தினமானது முதன்முதலில் உலகப் பல் மருத்துவக் கூட்டமைப்பினால் (FDI) 2007 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "A happy mouth is... A HAPPY MIND" என்பது ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★